ஓலை 45 | ஓசை 160 | கன்னி(செப்டம்பர் ) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகழும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல
உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல்.**

தம்மை வருத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாமலிருத்தலை, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவர்.

**Translation:**

Even to those that hate make no return of ill;
So shalt thou wisdom's highest
law, 'tis said, fulfil.

**Explanation:**

So shalt thou wisdom's
highest law, 'tis said, fulfil.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்

சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்

### அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,

மயிலாடுதுறை - 609001

# பஞ்சபூதங்களில் நிறையும் வாழ்வு


உயிரின் மூச்சை வளர்த்திடும் வளியில்
உடலும் விளைந்தே உற்சாகம் கூட்டும்
உணவின் தன்மையில் உணர்வினைக் கூட்டியும்
உலகின் நகர்வில் வெளிச்சம் நீட்டியும்
அனலாய் மாறும் நெருப்பின் நெருக்கம்
அகிலமென உயர்ந்து உயிரைத் தாங்கியும்
மண்ணையும் பொன்னாக்கி மகத்துவம் காட்டியும்
தன்னையே ஒப்படைத்து தரணியில் நிலைத்திடும்
நிலத்தின் பொறுமையில் நெஞ்சம் மகிழும்
நாகரிகம் விதைத்து நலமுடன் நிமிர
நீரென ஊறும் அமுதத்தின் வரத்தில்
உயிரும் பயிரும் ஒன்றாய் விளையும்
ஆகாயமென விரிந்து ஆனந்தம் நீட்டி
வானத்தை அளந்திட வழிகளைக் காட்டி
மனிதனுக்குள்ளும் பூதங்களாய் ஒடுங்கி வாழும்
இயற்கையின் வனப்பில் இதயம் நிறைப்போம்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# எண்ணங்கள்

உளிகள் கொண்டு
வடிவமைக்கா
மலைகளின்
அழகியல் சுமக்கும்
உயரங்களுக்கு
எண்ணங்கள்
சதா முயற்சிப்பதால்
பாதங்கள் இரண்டும்
காலாற
நடைபயிலுகின்றன
ஒரு
புன்னகைத் தீவில்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# வேளாண் விஞ்ஞானி ம.சா.சாமிநாதனுக்கு அஞ்சலி!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து ஐந்தாமாண்டு
ஆகத்துத் திங்கள் ஏழாம் நாளன்று
சாம்பசிவன், பார்வதி தங்கம்மாள் தம்பதிக்கு
கும்பகோணத்தில் மகனாய்த் தோன்றிட்டார் சுவாமிநாதன்!
தந்தையோ அறுவை சிகிச்சை நிபுணர்!
மகனை மருத்துவராக்குவது தந்தையின் விழைவு!
வங்கதேசத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைக் கண்டவுடன்
வேளாண்மை மீது ஈர்ப்பானது நெஞ்சம்!
கோவை வேளாண் கல்லூரியில் இளங்கலை
விவசாயப் பட்டம்! தில்லியில் இந்திய
வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் மரபணுப்
பயிர்கள் பாடத்தில் முதுகலைப் பட்டம்!
அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் பல்கலையில்
முனைவர் பட்டம்! அதன்பின் பணிகள்
அனைத்திலும் இவர் தொட்டார் உச்சம்!
அறுபதுகளில் இந்தியாவில் உணவுப் பஞ்சம்!
அதைத் தீர்க்க பசுமைப் புரட்சிக்கு
வித்திட்ட தந்தையிவர்! புதியரக கோதுமை
புதுப்புது நெல்வகைகள் அறிமுகம் செய்தாரே!
இறக்குமதி செய்துவந்த நிலைமை மாறியதே!
இயந்திரங்கள்,களைக்கொல்லி மருந்துகள், உரங்களென
விவசாயத்தில் பற்பல புதுமைகளைப் புகுத்தியவர்!
தரமணியில் ஆராய்ச்சி அறக்கட்டளை உருவாக்கி,
கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்கு உழைத்தாரே!
நாற்பத்தி யொன்று தேசிய, சர்வதேச விருதுகள்!
உலக அளவில் பல்கலைக் கழகங்கள் அளித்தன
முப்பத்தெட்டு மதிப்புறு முனைவர் பட்டங்கள்!!
இருபதாம் நூற்றாண்டில் மிகப்பெரிய தாக்கத்தை
ஏற்படுத்திய ஆசிய ஆளுமைகளில் இவரொருவர்!
அன்னாருக்கு அஞ்சலியை செலுத்தி வணங்குவமே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# சுழிக்குள் வாழ்க்கை

சுழிக்குள் வாழ்க்கை
சுழலவே செய்கிறது.

பிறவியை அடைந்தோர்
பிறப்பை அறுத்திட

அன்போடு பேசிடுக
அருளோடு ஈந்திடுக.

உழைத்தால் வாழ்வு
உயருமதை உணர்ந்திடுக.

இன்றைய செய்கை
இனிதாய் இருந்தால்

நல்லதே நடக்கும்
நலமே விளையும்.

பல்லார் முனியப்
பயனில சொல்லாதீர்.

தீயவை செய்தால்
தீயவையே விளையும்.

நிலையாமை நிலைத்த
நிகரில்லா உலகிது.


சினமதைத் தவிர்த்தே
சிரித்து வாழ்ந்திடுக.

இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்திடுக.

பற்றற்று வாழ்ந்திடப்
பற்றற்றானைப் பற்றிடுக.

பொருள் அல்லவற்றைப்
பொருளென்று உணரும்

மயக்கத்தைப் பெற்றால்
மாணாப் பிறப்புண்டாம்.



தவறினைத் திரும்பத்
தவறியும் செய்யாதே.

அல்லல் வந்திட
அழுது அரற்றாதே.

நடப்பவை யாவும்
நல்லதற்கே என்றுணர்க.

வாழ்வது ஒருமுறை
வாழ்ந்து பார் மகிழ்ந்தே.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# இழப்பதும் பெறுவதும்

இழப்பதும் பெறுவதும்

மறுவாசல் திறப்பதற்கே
திறந்தவாசல் மூடப்படுகிறது.
நீ வேறொன்றைப் பெறுவதற்கே
உன்னிடமுள்ளது பறிக்கப்படுகிறது.
நீ இழத்தலுக்கு உட்படாவிடினும்
எடுத்துக்கொள்வது அவன் உரிமை.
நீ தடுக்க நினைக்கலாம்
வேறொன்றைப் பெறுவதற்கு
முயற்சிக்கலாம்.
அவன் தீர்மானித்தலின் பொருட்டே
எதுவொன்றையும்
நீ இழப்பதும் பெறுவதும்.

/

சாபம்

விதைகள்
பூமியை சபிக்க
பூமி
வானத்தை சபிக்க
மனிதனை சபிக்கிறது
வானம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வீட்டின் முற்றத்தில்

ஆகா கல்யாணம்
மூன்றுநாட்கள் முன்னே

பந்தலிட்டு ஊரழைத்த
கல்யாணமாம் அன்று

ஆடம்பர மண்டபத்தில்
அலங்கார மேடையில்
அரங்கேறும் திருமணமின்று

வகைவகையாய் உணவுகள்
ஆட்டமும் பாட்டமுமாகக்
கொண்டாட்டமானது



வருடங்களுக்கப்புறம்
காணும் சொந்தங்களும்

கதை பேச நேரமின்றிக்
கைபேசியில் கரைந்தது

பேச நினைப்பவர்களும்
ஆட்டம் பாட்டங்களில்
அமிழ்ந்து போயினர்

ஒரே தலையணையில்
இருதலைவைத்துப் படுத்து
விடியவிடியக் கதைத்தவர்களும்

தனி அறைகளமர்த்தி
தனித் தீவாகிப் போயினர்

வந்த உறவுகளைத் தெரியப்
புகைப்படமெடுத்த காலம் போய்

உறவுகள் ஒதுங்கி நிற்க
மணமக்களைக் கோமாளியாக்கும்

புகைப்பட கலைஞர்கள்
இதுவே இன்றைய நாகரீகம்.

கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோவில்

# ஆனந்தம் பரவுது அடர்ந்து

சலசலவென மழைத்தாரை
சகமும் சுகம்பெறும் குளிர்ப்போர்வை

கலகலவென சிரிக்கும் இலைகள்
காற்றுடன் பேசிடும் மரக்கிளைகள்

சோம்பல் முறிக்கும் இரவு
சப்தங்கள் நிறையும் உலகு

வானம் உதறும் துளிகள்
வாசலின் கோலமாய் குழிகள்

உயிர்த்து எழுந்திடும் வாசம்
உயிரில் பூக்களின் சுவாசம்



மழையைப் பேச அனுமதி
மழையுடன் பேசுதல் வெகுமதி

துளிகளில் உடையுது மனது
துன்பம் துடைக்கும் பொழுது

இதயமும் நனையுது இழைந்து
ஆனந்தம் பரவுது அடர்ந்து

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# சமாதானப்புறா

வல்லூறு கழுகுகளுக்கு
முன்னே கையாலாகாத
என்னைத் தூது அனுப்பும்
முட்டாள் மனிதனே!
சமாதானத்தை முதலில்
உன் மனதில் இருத்து!
அகிலத்தில் அன்பை விதைத்திடு
அள்ளிக் கொடுத்திடு!
கொடுப்பது ஒன்றானால்
கிடைப்பது நூறாகும்!
ஒருவருக்கொருவர் சமாதானம்
செய்யத் தேவையில்லாமல்!
அன்புத் தழைத்திடும்
நானிலத்தில்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# துளிர்த்தல்

நான் தந்த கூந்தலில்
மணக்குது மல்லி

சிற்சில சமயங்களில்
மற்றதின் வெறுமை
பரவசத்தின் முகத்திலும்
பாறாங்கல் விழுங்கியதுபோல்

சிதறிய கண்ணாடியில்
சிறு சிறு துகள்களிலும்
சிதறாத நான்

இவளோ
சிட்டுக்குருவியல்லவே

தனி கூட்டை
தட்டிவிட்டு வந்தவழி
சென்றுவிடவே


சித்தெறும்பன்றோ
சிறுபடை யெனினும்
தலைமை வெகுமதி



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

அகர முதல

# காட்டுக் குறத்தி




கைரேகை பார்க்கலியோ
கைரேகை பார்க்கலியோ
வீதியெங்கும் கூவி கூவி அழைப்பாரே

குட்டைப் பாவாடையோடு
ஊசியையும் பாசியையும்
ஊர் ஊராக விற்றுச் செல்வாரே

நரிப்பல் நகம் தேன் வாங்கலியோ
ஆளுக்கொரு திசைச் சென்று கூவுவாரே

பச்சைக் குத்துவதும் இவர்களது தொழிலே
காக்கா குருவி பிடிக்க செல்லவும்
வேட்டையாடும் தொழிலுக்கு செல்வதாகவும்
ஒரே இடத்தில் நிலையாக வசிப்பது இல்லை
ஆறு மாதம் ஒரு முறை
இடம் மாறி சென்று செல்வார்கள்

வேலையில்லா காலத்தில் தாயம் சீட்டுக்கட்டு
சில்லாகுச்சி பெரியவர் முதல் சிறியவரோடு
விளையாடிச் சென்று எந்நேரமும் மகிழ்வாரே

யாரிடமும் கையேந்தாமல் சுயமாக உழைத்தாலும்
மக்கள் இவர்களை மதிப்பது இல்லை
இருளில் மூழ்கும் இவரது வாழ்க்கை

வெளிச்சத்தை நோக்கி அமையுமா சாமியோ சாமி.

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# அன்னையின் முத்தம்

கருவாக நான் உதித்தபோது
மனதார நீ மகிழ்ந்து
அளித்த அன்பு முத்தம்



சிசுவாக நான் வளர
சிந்தை மகிழ்ந்து நீ
சிறுகதந்த சிறந்த முத்தம்

மழலையாக நான் பிறந்தபோது
மடியினில் நீ ஏந்தி
நெற்றியில் இட்ட நெடியமுத்தம்

நடை பயில முயன்று
தடம் மாறிய போது
கொடுத்த தாராள முத்தம்

தோல்வியில் நான் துவள
தோள் தட்டி என்னை
தேற்ற கொடுத்த முத்தம்

வெற்றியில் நான் தவழ
பாராட்டு மழையாக எனக்கு
நெற்றியில் தந்த முத்தம்

நீ கொடுத்த முத்தங்களின்
வகைகள் தான் ஏராளம்
ஆனால்
அதை கொடுத்த உன்
அன்போ என்றும் தாராளம்

நான் பிறந்த போது
நீ கொடுத்த முத்தம்
நான் இறக்கும் போதும்
நீ கொடுக்க வேண்டும்
இதுவே எனது ஆசை

என் அன்னையாக முத்தமிட்டாலும் சரி
என் மழலையாக முத்தமிட்டாலும் சரி

என் முதல் முத்தமும்
என் கடைசி முத்தமும்
உன் முத்தமாகவே வேண்டும்
என் அன்னையே!

கவிஞர் ஜாய்ஸ் வசந்தராஜ்,சென்னை

# அன்னையே!

நல்ல காற்றை சுவாசிக்க
மீண்டும் கருவறையை நாடினேன்
கருவறை கொண்டவளுக்கு
கொள்ளி வைத்ததை மறந்து
நினைவாக்கினாள் மீண்டும் எனை
கண்ணீர் குளமாக்கினாள்
அம்மையே அம்மையப்பனாய் வாழ்ந்தாள்
வீரியம் கொண்டவள்
வீரநடை போட்டாள் முள்ளின் எதிர் முனையில்
வலியது வாழ்வினை வாட்ட
அதனிடம் துணிவை காட்டினாள்
தாயவள் மக்களின் துணையோடு
முள்ளினை தாண்டி தண்டினை பிடித்தாள்
வலி குறைய வாழ்வு மிளிர்ந்தது
நிம்மதி பெருமூச்சு சற்று வீசியது அவளுக்கு
பொறுக்க முடியவில்லை பூமிக்கு
வா என்னிடம் விதைத்து விடு மண்ணிலே என்றது
தயங்காது சென்று விட்டாள் விண்ணிலே வென்றது
தாயுமானவளே தந்தைக்கு நிகரானவளே
பாதியில் தவிக்க விட்டு
ஜோதியாய் ஆனாயே
பழி சொல் தாங்காமல் பதறுகிறேன்
விழிக்கிறேன் கண்மூடி விடிய விடிய
துணையவள் கதறுகிறாள் கண்ணீர் வடிய வடிய
தாயவள் விட்டு சென்றாள் அம்மை அப்பனாய் இருவரை
இறுக பிடித்தனர் சொல்லிலும் செயலிலும்
நினைவு கூராத நாளில்லை என் அன்னையை
அம்மை அப்பனிடம் வெறுக்க வைத்தது என்னை
யோசிக்க தெரியாமல் நிற்கிறேன் துணையோடு
தாயே எமனிடம் சண்டையிட்டு மீள்வாய் என நம்பினேன்
நினைத்து நினைத்து தவிக்கிறேன்
நீ என்னோடு இருப்பதை உணர்கிறேன் பல நாள் கனவில்
சில நாள் உணர்வில்
உதிராதே உதித்துவிடு என்னுள்
உணர்த்தி விடு உறவுகளை என்னிடம்
தூற்றி விடும் உறவுகளை ஏற்றுக் கொள்ளும்
மனப்பக்குவம் என்னிடம் இல்லை
அன்னையே அரவணைத்துக் கொள் என்னையே!



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# மருந்துகளும் மாத்திரையும்

மருந்துகளும் மாத்திரையும்
மிச்சவாழ்வில் மிகையாக
மீட்டெடுத்திடவே
மீளாபிணிக்குமே
முழுஉணவானதே
முதன்மைதமிழ் மருத்துவமும்
மூளியானதே
மூடுவிழா நடத்திட்டு
மெல்லவே நவீன மருத்துவமும்
மெல்லிடையோடு
மேகமூட்டமாய் பரவிட்டு
மைந்து மிகுந்தே
மையல் நடை போட்டிடுதே
மொத்த உடலையும்
மொய்த்து எடுத்திட்டே
மௌட்டியமில்லாதவர்களிடமும்
மௌனமொழி பேசியே
மத்திம வாழ்விலிருந்து
மரண கீதம் பாடியே
மண்ணுக்குள் கண்வைத்தே
மனிதனையும் மறுபிறவியறியாமல்
மாத்திரையும் மாண்டுவிடசெய்கிறதே!



கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# சிலப்பதிகாரம் (பதினொன்று)

**4. தவச் சீலர்கள் தரிசனம் :**
நீர் பெருக ஓடும் காவிரித்தாயால் காணும் இடமெல்லாம் பசுமை
ஊராளும் மன்னன் மனிமகுடத்தின் வைரக்கல் காவிரியாகும்
சீரும் சிறப்பும் மிக்க உழவர் பெருங்குடி மக்களின் ஆதாரம் காவிரி
சீர்மை பெற்ற காவிரிக் கரைகளைக் கடந்து சென்றார்கள் மூவரும்



பலநாள் நடந்து திருவரங்கம் எனும் திருத்தலம் அடைந்தார்கள்
சில தவச் சீலர்கள் இருக்கும் இடம் தேடி வந்தார்கள் கவுந்தியடிகள்
நில மகள் கண்ணகியும் கோவலனும் சீலர்களின் ஆசி பெற்றார்கள்
நலமான வாழ்வை எதிர்நோக்கும் அவர்கள் ஆறுதல் அடைந்தார்கள்

தவச் சீலர்களின் தலைவர் கோவலனுக்கு வரும் துன்பம் அறிந்தார்
நவ மணிகள் விற்கும் பெரும் வணிகனின் நிலை கண்டு வருந்தினார்
"சுவர்க்கமான வாழ்க்கை சுணக்கமானது. தீ வினை விடாது தொடரும.
அவனியில் வெட்ட வெளியில் இட்ட தீபம் அணையும் இருள் சூழும்"

அருகன் சமணக் கடவுள் நமையாளும் முதல்வன், அறிவன், புனிதன்
ஒருவனானவன், மங்கலம் செய்பவன், பரவெளியாய் ஒளிர்பவன்
பெருமைக்குரியவன், ஈசன், சுயம்பானவன் , நான் முகன், வானவன்
அருளாளன் பழமையானவன் தவச் சீலரை வணங்கி அருள் பெற்றனர்

அருளுரைகள் கேட்ட கோவலன், கண்ணகி மனம் அமைதியானது
வரும் துயரங்களை மறந்து கவுந்தி அடிகள் முன் செல்ல நடந்தனர்
பெருகி ஓடும் காவிரியாற்றை ஓடத்தின் வாயிலாக கடந்தார்கள்
திருப்பங்களை எதிர்நோக்கி தென்கரையை அடைந்தார்கள்

**5. கவுந்தியடிகள் சாபம் :**
களைப்படைந்த இருவரும் இளைப்பாற பூஞ்சோலையில் தங்கினர்
வளையல் அணிந்த பரத்தையும் தீயவன் ஒருவனும் அங்கு வந்தனர்
வேளை கெட்ட வேளையில் அடிகளைப் பார்த்து அவள் கேட்டாள்
"விளையாடும், மன்மதனும் ரதியும் போன்ற இவர்கள் யார்?"

"இவர்கள் எம் மக்கள்" என்று பதில் அளித்தார் கவுந்தியடிகள்
அவர் கூறிய பதில் கேட்டு எள்ளி நகையாடி சிரித்தனர் இருவரும்
"தேவலோகத்தில் கூட இப்படி நடந்து கேள்விப் பட்டதில்லையே
தவக்கோலத்தில் இருக்கும் தங்களுக்கு இது தகுமா? இது சரியா?"

"உடன் பிறப்புகள் கணவன் மனைவி இல்லற வாழ்க்கையா?"
தடம்மாறி வந்த வார்த்தைகள் கவுந்தியடிகள் எரிமலையானார்
பட படவென மூடர்கள் பேசியதைக் கேட்ட கவுந்தியடிகள் கோபம்
"கபட நரிகள் ஆகக் கடவது இருவரும்" சினந்து இட்டார் சாபம்

நரிகளாக ஊளையிட்டு அலைய கண்ணகி மனம் இளகினாள்
பெரிய மனதுடன் மன்னித்து சாபவிமோசனம் தருக கெஞ்சினாள்
"பெரியீர் இவர்கள் சாபம்நீங்கி உய்தி பெறும் நாள் எப்போது?"
"சரியாக பன்னிரண்டு மாதங்கள் கழித்து மானுடனாவார்கள்"

தவத்திரு அடிகள் கூறியதைக் கேட்டவள் மனம் நிறைந்தாள்
மூவரும் மதுரையை நோக்கி நடைப் பயணம் தொடர்ந்தார்கள்
தேவராக கவுந்தியடிகள் துணையிருக்க அச்சம் தவிர்த்தார்கள்
கவனமாக பயணம் தொடர புகார் காண்டம் நிறைவுற்றது.

முதலாவது புகார்க்காண்டம் முற்றும்.

**(தொடரும்)**

கவிஞர் ந.திருக்காமு

# என் இயேசு

**அ**ன்பு நிறந்தவர்
**ஆ**றுதல் அளிப்பவர்
**இ**ரக்கம் உள்ளவர்
**ஈ**டு இணையில்லதவர்
**உ**தவி செய்பவர்
**ஊ**ண் உறக்கம் தருபவர்
**எ**ன்றும் மாறாதவர்
**ஏ**ழையின் தொலானவர்
**ஐ**யாயிரம் பேரை யோசித்தவர்
**ஒ**ருவராய் இருப்பவர்
**ஓ**தும் வழி காட்டியவர்
**ஔ**டதமானவர்



கவிஞர் க.மணிமாறன்,மயிலாடுதுறை மாவட்டம்



அகர முதல

# அவள்



மனதின் ஓசை
கேட்டு பாடும்
குயில்!

தென்றல் திசை
தெரிந்து தாலாட்டும்
மரம்!

திங்கள் வருகை
பார்த்து மலரும்
அல்லி!

வானில் வண்ண
கோலமிடும் விண்மீன்
திரள்!

காத்திருக்கின்றன
அவளை காண!

கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# மஞ்சள் முகத்தழகி அன்பின் அகவழகி

மஞ்சள் முகத்தழகி
அன்பின் அகவழகி.
கொஞ்சிச் சிரிக்கும்
வஞ்சியவளோ கொள்ளைக்காரி

விழி வலையில்
வழிப்பறி செய்பவள்
வசந்தத்தின் வரவிருக்கும்
வாசகத்தின் தேவதையவள்

சந்தனத் தோப்பினில்
சவ்வாது வாசமவள்
சர்க்கரை பந்தலின்
சரச குமரிபவள்

என் மனதை
ஏங்க வைத்தே
எட்டி நின்றே
எள்ளி நகையாடுவாள்

ராக்கெட் வேகத்திலே
ராசாத்தி வந்தாலும்
ராகங்கள் பாடியே
யாகங்கள் செய்திடுவாளே



இதழில் கனிரசம்
இனிப்பாக வழங்கிட
இன்னோர் கணையால்
இன்பத்தேனின் அருவிபானாளே

காதலக் கொஞ்சம்
கண்ணில் வைத்தே
கவிழ்த்து விட்டுப் போன
கன்னி எங்கே?

கண்கள் சலிக்காதே
கடலோரம் தேடுகிறேன்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பூமுகம் மறைமுகமாய்



முதன்முதலாய் அன்னையென
பட்டமளித்த குழவியோ.
பாரம் தாங்காது
மடி சேரா விலகியே

மருத்துவ பரிசோதனையில்
இருதயம் துடிப்பின்றி
ஆழ்ந்த நித்திரையில் துயில
எத்தனை வலியை அனுபவித்தாளோ.

நினைவோடு பதிந்த என் மழலையின் மீதாக.
பாரத்தை படர விட்டதென்
தவறென உணர்ந்தும் குற்ற உணர்ச்சியில்
குருதி கொந்தளிக்க

ரணமாய் இருந்த கணங்கள்
பிரசவ வலியில்
ஒருமுறையேனும் நின் வதனம் காணக்கூட
தாய் இவள்.

மாரோடு வழியும் உதிரத்துளியும்
நின் பசியை எனக்குணர்த்த
வலி விழி வழியே.

மதில் தோளோடு தாயிவள்
கதர மதில் மறைத்த நிதர்சனங்கள்
எத்தனை எத்தனையோ.
தாயிவள் வலி உணர
முடிகிறதா?
நினைவுகளில் மழலையின் ஸ்பரிசம்
தீண்டலோடு நகைக்க.
கொஞ்சி அள்ளி அணைக்க
வதனம் மட்டும் மறைமுகமாய்.

**கவிஞர் கார்த்தி**

# ஆறுகள்

விசும்பிலிருந்து வீழ்ந்து
மலைகளிலே தவழ்ந்து
அருவியாக உருகி

பாறைகளிலும்
பள்ளங்களிலும் நுழைந்து
செல்லும் இடங்களையெல்லாம்
செழிக்கச் செய்து

முந்நீராகவும்
நன்னீராகவும்
பாய்ந்து பயன்தரும்
என்னைப் பாழாக்குவது
ஏனோ?

நாகரிகம் தோன்றிய இடமோ இன்று
நாதியற்றுக் கிடக்கிறது
சோலைகளெல்லாம்
பாலைகளாகிய மாயமென்ன



பொறுப்பு அற்ற மானிடா
வெறுப்புடனே கூறுகிறேன
மறுப்பு இல்லை இதற்கு
பஞ்சம் பசி போக்கி
அறத்தைக் காக்கும்
என்னை மறப்பதா?

மரங்களை வெட்டி
மணலை அள்ளி
வேதிப் பொருட்கள் கலந்து
மனிதம் தொலைத்து
வணிகம் செய்யும் மனிதா
கழிவுகளைக் கலக்கும்போது
கலங்கவில்லையா உன் மனது

வேருகளைத் அறுத்து
பேறுகளைக் காப்பது எங்ஙனம்?
அகிலத்தை செழிக்கச் செய்யும்
எங்களை அழிப்பதால்
அனாதைகளாவது நாங்களல்ல
ஆறறிவு படைத்த நீங்களே

இன்று உலக ஆறுகள் தினம்

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# எனது நான்

அருகில் வந்து நெருக்குதலும்
தொலைவில் சென்று அலைக்கழிப்பதுமாய்
இருத்தலும், இல்லாததுமாய் இடம் பெயர்கிறது

சூழலின் இயல்புத்தன்மை மறந்து
கலைத்து, மீண்டும் அடுக்கி
தன்னை நிலைநிறுத்த எத்தனிக்கிறது

ஏதோ ஒன்றை அடைய
இலக்கென்ற வரையறையை வகுக்காது
பெரும் பரிணாமம் கொள்கிறது

அடுக்குகளில் மேலேறி உச்சமாகிறது
தடுக்குகளில் தடுமாறி எச்சமாகிறது
இடுக்குகளில் கசியும் ஈரமாகிறது
கொதிக்கும் நெருப்புக் கோளமாகிறது

அகண்டு விரிகிறது
சுருண்டு காணாமல் போகிறது
மருண்டு பின்னும் முயல்கிறது

எனக்குள் ஊடாடும் என்னை
நிலைநிறுத்தும் நங்கூரத்தைத்
தொடர்ந்து தேடும் முயற்சியில்
என்றாவது வெற்றி பெறட்டும்
எனது நான்.



கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ, பட்டாபிராம் (சென்னை)

# குறள் நெறி (அந்தாதி கவிதை)

பகவான் நினைத்தால் பந்தம் நிலைக்கும்
நிலைத்த உறவால் நிம்மதி கிடைக்கும்

கிடைக்க பெற்றால் பிராத்தனை பெருகும்
பெருகிய வளத்தால் பெருமை வளரும்

வளர்ந்த மரமாய் வாழ்வு உயரும்
உயர்ந்த உள்ளம் நன்றாய் ஒளிரும்

ஒளிரும் விளக்கில் வெளிச்சம் பரவும்
பரவிய ஒளியால் உள்ளம் குளிரும்

குளிர்ந்த மனதில் தெய்வம் இருக்கும்
இருக்கும் எண்ணத்தில் நிலைப்பார் பகவான்



கவிஞர் ஜெ.சிவக்குமார்,விழுப்புரம் மாவட்டம்

# மயங்குகிறது என் மனசு

அவளின் பாதமோ!
மழலையின் பாதம் போன்றது - அதில்
மாலை போன்றது
அவளின் கொலுசு.

அந்த கொலுசோ
கொஞ்சி விளையாடுகிறது..
அவளின் பாதத்தில் - அதைப்
பார்த்த என் மனசோ
மயங்கி விழுகிறது.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# இழப்பென்பது மரணம் தவிர வேறேது

நீங்கள் எதை இழப்பு என நினைக்கிறீர்கள்
இங்கு மரணம் ஒன்றைத் தவிர வேறு எதுவும் இழப்பே கிடையாது.
ஏனெனில் ஒரு இழப்பு இன்னுமொரு அருளால் நிரப்பப் படுகிறது.

அப்போது பேரானந்தம் அடைகிறோமல்லவா.
அப்படியென்றால் இழப்பெங்கு இருக்கிறது.

அற்புதமான வாழ்க்கை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.
உறுதியாக நம்புங்கள்.

யாரையும் ஏமாற்றாத நல்ல உள்ளம்
நீங்களாக இருந்தால் உங்களிடம் வந்திருக்கும்
அலட்சியம் உங்களது வாழ்வில் வரவிருக்கும்
துன்பத்தை விரட்டுவதாகவும் உங்களுக்கென இருக்கும்
அருளை உங்களிடம் சேர்ப்பதற்கான
வழிப்பாதையாகவுமே அமையும்.




கவிஞர் சுமையா சத்தார்,அனுராதபுரம்

# தீபமேற்றும் ஒளியாய்

எத்தனை எத்தனை ஏழை குடிசைகள்
எல்லா பக்கமும் இருண்ட நிலை
எறித்திட விறகு அடுப்பு இங்கே
எறிய வைத்தது மண்ணெண்ணெய் தானோ.

வயிற்றுப் பசியை போக்கிட வந்ததோ
வறுமை வீட்டின் ஆயுதம் இவனோ
வறுமையின் வீட்டுக்கு வந்த பொக்கிஷமோ
வறியவனின் படிப்புக்கு தோழன் இவனோ.

இருள் சூழ்ந்த இரவின் பாதையிலே
இடரி வீழாமல் தடுத்துக் காக்க
இவன் தீப்பந்திக்கு ஆணி வேராய்
இமயத்தை தொட்டவனும் படித்ததும் இவனாலே.



குளிரும் உடம்பிற்கு தீபமேற்றி வந்தே
குளிரும் தேகத்தை இதமாக ஆக்குவானே
குளிரே அகலும் இவன் துணையாலே

குறைகளை நிறையாக்க வந்த
அற்புதமே மண்ணெண்ணெய்.

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# நிராகரிப்பு

அடைத்து மூடப்படும்
கதவுக்கு கேட்பதில்லை
வெளியில் நிற்பவரின் இதயம்
நொறுங்கும் ஒலி



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# முன்னேற்றப் பாதை

ஓய்வின்றி தனது
வளையப் பாதையில்
சுற்றி வரும்,
கடிகாரமுட்களும்
காட்டுகிறதே;
முன்னேற்றப் பாதையின்
பயணத்தை !

ஒன்றையொன்று
துரத்திக் கொண்டு
முன்னே வந்திடும்
அலைகளுக்கும்
எல்லை வகுத்திடுதே
கடற்கரைகளும்!
கடிகார முட்களுக்கோ
எல்லையற்ற இடைவிடாத
பயணம்!

பசுமை துளிர்த்த
இலைகளும் களைத்துப்
போவதில்லையே
உயிர் மூச்சுக்கான
உற்பத்தியில்!
கரியமிலங்களை
விழுங்கிக் கொண்டு
நமக்கே நமக்காக,
உயிர் வளியையும்
தருகிறதே!

நம்மை வாழ வைக்கவும்
முனைப்புடன்
முன்னேறிச் செல்லவும்,
ஒற்றைக் கருவிலிருந்து
ஒவ்வொரு அங்கங்களாக
உருப் பெறவும்.

தாயின் ஒவ்வொரு
அணுவும் போராடி,
வெற்றி பெற்றதனாலேயே
நாம் இன்று
நிற்கிறோம் இன்னாரது
மகளும் மகனுமாக!

பிரபஞ்சத்தின் ஒவ்வொரு
அம்சங்களும்,
இங்கே நமக்காகவே
போராடி வர
முன்னேற்றப் படிக்கட்டுகளை
ஒன்றொன்றாக ஏறி
சிகரம் தொடவும்,
ஏன் இன்னும் தயக்கம்!

நாம் வெற்றிக்கான
முதல் படியில்
பிரயத்தனத்துடன்
ஏறினால்,
அடுத்தடுத்த படிகளையும்
எளிதாகக் கடந்திடுவோம்!
கண்ணுக்குத் தெரியாத
ஒற்றை சக்தியும்
நம் கால்களைத்
தாங்கிக் கொள்ள
காத்திருக்கிறது!

விடாமுயற்சி
விசுவரூப வெற்றி!



கவிஞர் மலர் அபி

# பயனிலசொல்லாமை

## அதிகாரம் 20

பயனற்றச் சொற்களை உதிர்க்காதே

இவ்வாறு நண்பர்களிடம் உதிர்த்தாய் எனில்
அறம் அற்றுப்போகுமே
அற்று போனாலும் அதைவிட தீமையும் தருமே




பயணத்சொற்களை உதிர்த்தாய் எனில்
உன்னைப் பயனற்றவனாக்கி விடுமே

பண்பும் பயனும் அற்ற சொற்களை
பலர் முன் பகிர்ந்தால் உன்னை விட்டு
மகிழ்ச்சியும் நன்மையும் மாய்ந்து விடுமே

நற்பண்பு உடையோர் பயனற்றச் சொற்களைக் கூறுவர் எனில்
அவர் மதிப்பும் மரித்து விடுமே

பயனற்ற சொற்களை உதிர்த்து பயனடைய நினைக்காதே
நீ குழந்தை அல்ல பதர் என சொல்லுவர் உலகத்தோர்

இனிமையான சொற்களைச் சொல்லாவிடினும்
பயனற்றச் சொற்களைக். கூற மாட்டர் சான்றோர்

அறிவுடையோர் பயன்தரா சொற்களைத்
தன்னை அறியாமல் கூறி
தன்னைத்தானே இழிவு படுத்த மாட்டர்

நீ கூறும் சொற்கள் பயனுள்ளவை எனில் கூறு
எக்காரணத்தைக் கொண்டும் பயனில்லாச் சொற்களைக் கூறி
நீ அறிவிலி என பறைசாற்றாதே

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# காதலியின் தோழன்

இடறி விழ
நேர்ந்தால்
இதயம்
பதறிடுவாள்
இமைபோல
காப்பாள்
தெய்வத்திற்கு
நிகரென
வைத்து பார்க்க ஆசை
தெய்வமே
பொறுத்தருள்க
அவள் எனக்கானவள்

கற்பனைக்கு
அப்பாற்பட்ட
காதலியின்
தோழன் நான்

நாங்கள்
காற்று
எழுதும் கவிதை

அவளுடன் நான்



கவிஞர் ஆர்.மோகன்ராஜ், சென்னை

# வாலிபம் கொஞ்ச நேரம்தான்

அறிந்த மாண்பில் ஆறாம் அறிவு
ஆளத் தொடங்கும் நேரம் காலம்
ஆண்டவன் ஆட்டம் வாலிப தோற்றம்
பார்க்கும் திசை பரவச விசை
பைத்தியக்கார பங்காளி பெயரை
வெட்டி முறிக்கும் வாலிப முறுக்கும்
தட்டி தூக்கும் தரணியில் காக்கும்
தங்கத் திகட்டு வாலிப பகட்டு
ஆணோ பெண்ணோ பாவனை பல்லாயிரம்
உயர்திணை அற்றினை அலங்கோலம்
களவும் கற்பும் காலத்தில் கலங்கும் பல தப்பு
வாலிபமே வழங்காத காட்சி இனமே
ஆண் பெண் திகட்டு காதல் புகட்டு
சொல்லாத செய்வினை சொல்லும்படி கைவினை
எட்டுத்திக்கும் பறக்கும் வாலிப முறுக்கும்
கலங்கும் காட்சி காலத்தில் சாட்சி
நீயும் நானும் நிபந்தனை ஏனோ
வாலிபத் தீண்டல் பல வழக்குகள் கண்டல்
காதலோ காதல் கை வினை மோதல்
யாரோ அவள் யாரோ அவன் கண்ட திகழவன்
பிறந்தும் இறந்தும் ஒன்றே ஒருநாள்
இதில் வாழ்வும் வழக்கும் ஒன்றே ஒருநாள்



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# நிகழ்ச்சி

அழைப்பு விடுக்கப்பட்டதிலிருந்து
யார் யார் நிகழ்வுக்கு போவதென்ற
நீண்ட திட்டமிடலுக்குப் பின்
குறித்த நாளில்
குடும்பம் சகிதமாக
குறிப்பிட்ட நேரத்தில்
வரவேற்பு தோரணங்களை
உரசி நுழைகிறோம்
அய்யரின் மந்திரத்தோடு
மேளதாளம் முழங்கி
சுபமுகூர்த்தம் சுபமாய் நிகழ
அட்சதை தூவி
வரிசையில் நிற்கிறேன்
பதிவாகும் நிழற்படத்தினில்
எனது வருகையையும்
பதிவு செய்திட

பளிச்சிடும் மின்னொளியில்
அணி திரண்ட அரிதாரங்கள்
அவரவர் கைபேசியிலும்
ஜொலித்து மறைய
எதிரிலிருக்கும் புகைப்படக்காரரின்
ஆளுமை மட்டும் அக்கணத்தின்
நொடிகள் முழுவதும் இயக்கிட
உறையில் சொருகிய மூன்றிலக்க
ரூபாய் தாளினை கைகளில் திணித்து
சிறு புன்னகையை பரிசளித்து
அவசரமாய் ஓடுகிறேன்
உணவுக்கூட வரிசைக்கு.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு



அகர முதல

# சிறகை விரி

சிறகடித்து பறந்திடு
சில்லென்ற காற்றாய் விரைந்திடு

நதிபோல நடந்திடு
நன்மையினால் நிறைந்திடு

தினம் தினம் கற்றிடு
திங்கள் போல ஒளிர்ந்திடு

நற்கனியென இனித்திடு
நல்லுறவை வளர்த்திடு

எளிமையாய் விளங்கிடு
எளியோர்க்கு உதவிடு

இசையென மலர்ந்திடு
இதயங்களில் இணைந்திடு

உழைப்பை விரும்பிடு
உயர்வதனை உணர்ந்திடு



கவிஞர் அ.சேவியர்,கடலூர்

# மலடாகும் மண்



இயற்கை என்றவள்
இன்பத்தின் அன்னை
செயற்கை வந்ததால்
சேதமாய் ஆனாளே

மண்ணும் உயிர்களைப்
பிரசவித்து உருவாக்குதே
கண்ணாய் காக்காது
கருக்குதல் முறையோ

மகத்துவம் கொண்டதை
மாசுபடுத்தும் மனிதமே
இகத்தை சிதைத்து
இடர்களை கொடுக்கிறதே

நெகிழிக் குப்பைகளால்
நொந்து போயிட
மகிழ்ச்சி தொலைந்து
மாற்றம் நிகழுதே

வாகனப் புகையும்
வானளாவி ஓசோனைத்தகர்க்க
தாங்காத நிலையில்
தனலாயானது பூமி

மண்ணும் மலடாய்
மறித்துப் போனதே
விண்ணும் கெட்டு
விசித்திரம் ஆனதே

நிலத்தைத் தோண்டி
வானளாவிய கட்டிடங்கள்
பலத்தை இழந்த
பயனற்றுப் போனதே

நஞ்சை விதைத்து
நாசத்தைத் அளித்தாயே
கெஞ்சும் நிலத்தை
கொஞ்சி வாழவிடுங்களேன்

கவிஞர் கிருஷ் அபி

# பெயத்தக்க நஞ்சுண்டமைவர்

பெயத்தக்க நஞ்சுண்டமைவர் ; நயத்தக்க நாகரீகம் வேண்டுபவர்



ஒரு நாள் உப்பு இராது
சிலநாள் உணவே இராது
மகராசி போய் மாமாங்கம் ஆச்சு
மருமகள் கையால் விஷம் பழகியாச்சு

நின்றால் குற்றம்! நடந்தால் குற்றம்
பெயரனை கொஞ்சினால் குற்றம்
Body boundary புதிய சொல் அவருக்கு
மக்கள் மெய் தீண்டல் இன்பம்
புரியா விலங்கு அது

நாகரீக போர்வையில் உலவும் நரி
வாரத்தில் எட்டு நாள் உணவு ஆர்டர்
மீதமான உணவை நாய்க்கு வைக்கமாட்டாள்
நல்லவள் எனக்கு மட்டுமே வைப்பாள்

மாத்திரை சாப்பிடுவதை நிறுத்தி ஆச்சு
மரணத்தை நோக்கி பயணம் தொடங்கி ஆச்சு
மகன் கேட்டால் மாத்திரை அலர்ஜி என்று சொல்ல பழகியாச்சு
விரைவாய்ப் போனால் விமோசனம்

ஓய்வூதியம் வாங்குபவன்தான்
ஒழித்து கட்ட விரும்பாததற்கான காரணம் அதுதான்
கண்ணில் பார்த்து வருடங்களாச்சு
வங்கி அட்டை எல்லாம் அவர்கள் வசமாச்சு

குருத்தோலை பழுக்கும் நிச்சயம்
இருந்து விடாது அப்படியே சத்தியம்
நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# தீராத காதல்

மொய்க்கும் விழிக்கு
விருந்தாகி
தனிமை தீர்க்கும்
மருந்தாகி

பரபரப்பில்
பிரிக்கும் விரல்கள்
பக்கங்கள் புரட்டுகையில்
பரவசத் தென்றல்

அகத்தோடு
உறவாடும் அவள்
மொழியில்
புதிது புதிதாய் தேடல்
தொடரியாய்

அசைந்தாடும் மனமும்
ஆழ்ந்திடும்
பெருஞ்சுவை இவள் வசம்

வழிப்பயணங்களில்
இவளின் ஸ்பரிசங்கள்
தூரங்கள் கடந்திடும்
தோழியின் அணைப்பாய்

இழப்பில்லாத பாதைக்குள்
இட்டுச் செல்லும் விந்தை
புத்தக காதல்



புத்தகம் கைசேரும்
தருணமெல்லாம்
புதிதாய் உணரும் உணர்வுகள்

மௌனமாய் மீட்டும்
மாயம்
பட்டைத் தீட்டிக் கொள்ளும்
பட்டறை
விடாத காதல்
விழிக்குள் பொதிந்து
வியக்கும் வரிகளில்
தொலையும் மனம்
தீர்ந்திடாத காதல்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# இன்னிசை

இனிமை தரும் வரம் இசை
இதயம் விரும்பும் பைங்கூழ் பசை
இரவுகள் இசையின்றி வெறும் கசை
இறகென பறக்கத்தேவை இன்னிசை

இலையுள்ள கிளை அமரும் கருங்குயில்
இளமையில் மஞ்சம் விரித்தாடும் மயில்
இவை இயற்கை தந்த இலவச கயல்
இசையால் இவை மீதும் எனக்கு மையல்

இமைகள் நனைக்கும் இன்னல் செய்தி
இன்பம் பயக்கும் ஆண்டவர் துதி
இகழ்ச்சியடையும் போதும் இதுவே கதி
இன்னிசை சிறையில் நான் என்றும் கைதி

இடப்பெயர்வு அடைந்து எங்கே போயினும்
இமயம் தொட்டு மீண்டும் வரினும்
இக்கணமே விண் உடைந்து சிதறினும்
இன்னிசையிடமே தஞ்சம் புகுவேன் நானும்



இளங்காற்று காதிலோதும் ரிதமான கதை
இதமுடன் கேட்டு ரசிக்க நானே மேதை
இயல்பற்ற நிலையிலும் நல்லிசைப் பேதை
இந்த நவீன உலகில் நானே கோதை

கவிஞர் ச. நந்தினி,பேரூர்

# மனக்குளிர்ச்சி ஆரம்பம்!

பறவைகள் பறக்கும் போது
மனம் பறந்திட ஆசை கொள்ளுதே
மேகங்கள் நகரும் போது
மனம் நகர்ந்திட சொல்லுதே
மரங்கள் அசையும் போது
மனம் அசைந்திட தோணுதே
உயிர்கள் நடக்கும் போது
மனம் நடந்திட ஆவல் கொள்ளுதே
மலை உயர்ந்து நிற்கும் போது
மனம் உயர்ந்து நிற்க ஏங்குதே
விண்மீன்கள் ஒளிர் விடும் போது
மனம் ஒளிர் விட துடிக்குதே
வெண்ணிலா தலை காட்டும் போது
மனம் தலை காட்ட நினைக்குதே
கதிரவன் உதிக்கும் போது
மனம் புத்துணர்ச்சி பெறுதே
பனித்துளி கரையும் போது
மனம் கரைவதை உணருதே
இவற்றை இரசிக்க ஆரம்பமானதும்
மனம் குளிர ஆரம்பமாகுதே



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# வாழும் கலை

மனிதனின் வாழ்நாள் எத்தனை வருடம்
எப்படி? எப்போது? எங்கே?
இவ் வினாக்களுக்கு பதில் எவருக்கேனும்
தெரிய வாய்ப்பு உண்டா?
ஒவ்வொரு மனிதனும் நீண்ட நாள் வாழவே
ஆசைப்படுகிறானே!
முடியுமா? என்றால் நிச்சயம் முடியும்.
என்று, மூதாதையர்களின் ஆன்மீக
தகவலும், அனுபவ முத்திரையும் கணிக்கப்
பட்டும் அதன்படியே வாழ்ந்தும்
ஆரோக்கியமாகவே மறைந்தும் போயிருக்கிறார்கள்
"மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை"
மனமும், உடம்பும் செம்மையாக
நல்ல உடற்பயிற்சியும், ஆரோக்கியமான
உணவும், நற்சிந்தனையும், பிறரிடம் காட்டும்
அன்பும், தெய்வ பக்தியுமே நம்மை
மேன்மையுறச் செய்யும் வழிகாட்டிகள்.
நாம் உண்ணும் உணவு அரை வயிறு
மட்டுமே உண்ண வேண்டும், கால் வயிறு நீரும்
கால் வயிறு காலியாகவும் இருக்க வேண்டும்.
பசித்த பிறகே உண்ண வேண்டும்.
பச்சை காய்கறிகளும், பழங்களுமே
ஆரோக்கிய உணவின் அடித்தளமே!
நம்மைப் போலவே பிறரையும் எண்ணவும்
எல்லா உயிர்களிடத்தும் அன்பையும்
கருணையையும் மேற்கொண்டால்
சுகமான நித்திரையும், ஆரோக்கியமான மனமும்
திண்மையான உடலும் கிடைக்குமே!
வாழ்நாளும் நீடிக்குமே!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# கவனம் பெண்ணே

கண்டதும் காதலில்
கண் மயங்கும் பெண்ணே
யாவுமிங்கு
தேவை முடியும் வரைதான்
தேனாய் இனிக்கும்
வார்த்தைகள்
நாதியற்றுப் போகும்
தேதி மறந்து போகும்
யாவுமிறந்து போகும்
காலம் கடந்த பின்னால்
ஏது நினைவில் வாழும்
மறவேன்என்ற வார்த்தையும்
மறந்தே போகும்
நிமிடங்கள் விலகா நட்பின்
உண்மை நிலை புரியும்
வலியும் வேதனையும்
உன் அனுபவ வடுவாகும்
கவனம் பெண்ணே
காலம் கடந்தபின் ஞானம்
வந்தென்ன லாபம்?



கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# சன்னலுக்கு வெளியே

மதியவள் உடன் வருவாள் இரவிலே
நிறுத்தம் வந்தவுடன் தூரம் சென்றிடுவாள்!

ஆதவனும் தொடர்ந்தவன் பகலிலே
உயரப் பறந்து செல்கிறான் நிறுத்தத்திலே!
மரம் செடிகளும் ஓடித்தான் வந்ததுவே!

வாகனமது நின்றவுடன் களைப்பைப்
போக்கிடத்தான் அவைகளும் நின்றனவே!

அடித்துப் பிடித்து ஏறிய பேருந்திலே
மழலை ஒன்று கேட்குது!

ஏனம்மா மரமெல்லாம் ஓடுதென்று
சன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்த்தபடி!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# விடியல் தேடும் வெண்ணிலா

சுழலும் இந்த உலகிலே இரவொன்று வந்திடுமோ
பிறக்கும் இந்த பிறவியிலே உறவுகளும் வந்திடுமோ
இருளுக்கு நிறம் கொடுக்க வெண்ணிலவு வந்திடுமோ
வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்க கனவுகளும் வந்திடுமோ
வளரும் அந்த வெண்ணிலவு பௌர்ணமியாய் போயிடுமோ
வளரும் இந்த பெண்ணிலா பருவமடைந்து போனாலோ
மின்னும் அந்த சந்திரனை விண்மீன்கள் சிறைபிடிக்க
பாவை இவளின் வாழ்வை உறவுகளும் சிறைப்பிடிக்க
சிறைபட்ட விண்மதியும் தேய்பிறையாய் தேய்ந்ததோ
அடைபட்ட பெண்மதியும் கனவு இழந்து போனதோ
பகலவனின் ஒளிவாங்கி ஒளிரும் நிலை நிலவிற்கோ
கணவனிடம் அருள்வாங்கி இயங்கும் நிலை இவளுக்கோ
அமாவாசையாய் போனாலும் வளர்பிறையாய் வளரும் அந்நிலவு
யார்வந்து தடுத்தாலும் கனவை துரத்திடுவாள் இந்நிலவு
பௌர்ணமியாப் போகையிலே விண்மீன்கள் பொலிவிழக்கும்
கனவுகளை வெல்கையிலே உறவுகளும் கை கொடுக்கும்
கரையுமந்த நிலவிற்கு கதிர் வந்து விடியல் தரும்
கனவுகளை சுமக்குமிந்த பெண்ணுக்கு யார்வந்து துணைகொடுப்பார்
விடியல் தேடும் பெண்ணிலா இவள்.



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு,இலங்கை

# ஆலய அமைதி

ஓர் அதிய சிலிர்ப்பு
அமைதியாக அரங்கேறியது
வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது
அது திவ்வியமாயிருந்தது

வெவ்வேறு ஒப்பனைகள் தரித்து
மாறுபட்ட சிந்தனைகள் சுமந்து
வேறுபட்ட வலிகளை தாங்கி
மண்டியிட்டு வேண்டின மனங்கள்

வாழும் வழிகள் தேடி
ஏதோ ஓர் நம்பிக்கையில்
நலம் வேண்டி குறை தீர
ஏங்கும் பிரார்த்தனைகள் ஏராளம்

தீருமோ தீராதோ
ஆறுமோ ஆறாதோ ஆனாலும்
கண்ணீரில் கழுவப்படுகிறது
தினம் தினம் வேதனைகள்

அற்புதம் நிகழுமோ நிகழாதோ
ஒப்புக் கொடுக்கப்பட்டது என்னவோ
உண்மையன்றி வேறில்லை
நிறைவேறட்டும் வேண்டுதல்கள்



கவிஞர் இளங்கோவன் மணியன்

அகர முதல

# மாலவனும் வைணவமும் (பகுதி 03)

'சிந்து'நதிக்கு கிழக்கமைந்த பகுதியதே 'சிந்து' ஆகும்!
சமஸ்கிருத ஈரானிய பாரசீக மொழியுருவே!
மருவியதால் 'இந்து ' வானது! நிலப்பரப்பே! மதமன்று!
அரேபியத்தில் 'அல்இந்த்'தாம்! ஐரோப்பிய மொழிகளிலே
'இன்தின் ' னாய் ' இந்துஸ்தான் ' ஆனதுவே! பதின்மூன்றாம்
நூற்றாண்டில் 'இந்தியப்பேர்' துணைக்கண்டம் 'சிந்துநதி
சுதானா' வென பாரசீகச் சொல்லானது! மதத்தையது
குறிப்பதல்ல! இடத்தையே சுட்டுவது! 'இந்துமதம் '
என்றழைத்தல் ஆங்கிலேயர் ஏற்பாடே! ஆதிசங்கரர்
ஆறுபிரிவு வகுத்தாரே! சைவமதாய் சாக்தமென
காணாபத்யம் கவ்மாரம் தன்னோடு வைணவமும்
சவ்மாரம் என்றமைத்தார் இந்துசமய விரிவறிய
வைணவத்தின் உபநிடதம், பதின்மூன்று நற்றுணையாம்!
குப்த்தர்தம் ஆட்சிதனில் தென்னாசியா முழுமையும்
வைணவமே துலங்கியது! வடகலையும் தென்கலையும்
மால்யியமே! மாத்வசார்பு கவ்டியமும் சுவாமிநாரா
யணப்பிரிவு அரேகிருஷ்ணா இயக்கமென பலவகைத்தே!
வழிகாட்டி நூல்களெனில்: வேதங்கள் உபநிஷத்து
கீதையொடு பாஞ்சராத்ரம் ஆகமங்கள் பாரதமொடு
இராமாயணம் பாகவதம் புராணங்கள்: விஷ்ணு
கருட நாரதீய பத்ம வராக ஐந்தோடு பதின்மூன்றின்
மிக்கதுவாய் அமைந்துளதே! ' சம்பாவமி யுகேயுகே ' வென
அவதாரம் தோன்றிட்டே ' துஷ்டநிக்ரஹ, சிஷ்டபரிபா
லனம்' செய்ய ஞாலத்தே சாந்தியது ஓங்கினதே!
வைணவத்தின் தத்துவம்தான் ' விசிஷ்டாவைத் த'மென்றிடுவோம்!
இராமனுஜர் நிர்மாண மதுவாகும்! ஆதிமூலம்
நாரணனே! பிரம்மமே உயிரதற்கு! ஈச்சுரனே
மேவுமுடல்! தாயார்தம் நோக்காலே பகவானின்
அருள்கிட்டும்! திருமகளின் பரிவாலே மாலவனின்
அனுக்ரஹத்தால் வாழ்வோங்கி வைணவராய் உயர்வோமே!



(தொடரும்)

கவிஞர் கணக்காயன் (இ சே இராமன்)

# பட்டாம்பூச்சி நினைவுகள்

பள்ளிக்குச் செல்லும் முன்புக்
காலை உணவாகப் பழையச் சோற்றுக்குத் தொட்டுக்கிட
விறகடுப்பில் சாலைக் கருவாடை சுடும் போது
அவசரத்தில் நெருப்புக்குள் விழுந்த
கருவாடுகள் தீயில் கருகிப் போவது உண்டு



புது பம்பரம் வாங்கிய உடனே
கொல்லாசாரியின் பட்டறைக்குப் போய்
அதில் உள்ள ஆணியை பிடுங்கி விட்டு,
மற்றப் பம்பரத்தைப் பதம் பார்க்கும்
யாக்கர் ஆணியை பொருத்துவது உண்டு.

ஒரே ஒரு பூப் போட்ட கோலிக் காய்
வாங்கிட்டு வந்து
அதை அடிக் கோலிக்காய் ஆக்கி
கால் சட்டை பை நிறைய
கோலிக்காய்கள் நிரப்பியதுண்டு.

சாலையோர தேநீர் கடையைச்
சுற்றிக் கிடக்கும்
சிகரெட் அட்டைகளைப் பொறுக்கி
பணம் விளையாட்டு,
விளையாடும் போது,
அடுக்கி வைத்த அட்டைகளை
உடைந்துப் போன
ஒரு மொசைக் கல்லில்
ஒரே சீவலில் அடிக்கட்டை வரைக்கும்
மண்ணோடு மண்ணாக வெட்டி
எறிவதுண்டு.


லட்சாதிபதியாக்காமல்
ஏமாற்றி விட்ட லாட்டரி சீட்டுகளை
அடுக்கி ரப்பர் பாயிண்ட் போட்டு
நாலு பேரைக் கூப்பிட்டுக் கொடுத்து
வங்கி மேலாளர் ஆனதுண்டு.

இப்போதோ
தொலைத்த பால்யத்தை
இன்னும் செரிக்காமல்
வீட்டின் கதவுகளை சாத்திக் கொண்டு
கைப்பேசியில் காவலிருக்கிறேன்.

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம். 4** **இனிமையான கணங்கள்**



தேவகியின் இழப்பு திடீரென்று வீட்டின் பூகம்பமாகவே தெரிந்தது. இடையிலே கொஞ்ச நாள் அவள் இல்லாதது மறந்து போனமாதிரி இருந்தது. இந்தச் சின்னப் பெண் அடம்பிடித்தது எனக்கு அவளைத் திரும்பத் திரும்ப நினைவூட்டுகிறது. ''தேவகி... உன்னோடு வாழ்ந்தமூன்று வருட வாழ்க்கை... அந்த இனிமையான கணங்கள். இனியும் எனக்கு புவனா மூலம் கிடைக்குமா?''

புவனாவும் நல்ல பெண்தான். மனம் கோணாமல் இன்னொருத்தி பெற்ற பெண் என்றும் பாராமல் திவ்யாவை தூக்கிக் கொண்டாட ஆசைப்படுகிறாள். வர வர அவளுடைய குணம் மாறுமோ என்று தெரியவில்லை.

மறுமணம் ஆகி ஒரு மாதம் கூட ஆகவில்லை. இத்தனை நாளாக அம்மா அப்பாவுடன் ஊரில் இருந்த பெண்ணை பெயர்த்தெடுத்து என்னோடு என் வாழ்க்கையின் இன்னொரு இடத்திற்கு கொண்டு போகிறேன்.
மொழி, மனிதர்கள், பழக்க வழக்கம், உணவு பழக்கம் எல்லாமே மாறுபட்ட இடத்திற்கு அவளை பழக்கிக் கொண்டாக வேண்டிய சூழ்நிலைக்கு இழுத்துப் போகிறேன்.

திவ்யாதான் ஒத்துப்போக மறுக்கிறது. தேவகியின் இழப்பை எத்தனை முறை பொய் சொல்லி ஏமாற்றுவது. இந்தச் சின்னக் குழந்தையிடம். தேவகி நம்மை விட்டு மறைந்து போனதை சொன்னால் இந்தச் சின்னப் பூவிற்கு புரியுமா?புரிந்தால் வாடி வதங்கிப் போய்விடாதா? எப்படி புரிய வைப்பது?. புவனாவும் உனக்கு அம்மாதான் என்றால் ''அம்மா ஆண்டவன் கிட்டே பொம்மை வாங்கி வர போயிருக்கிறாள். இது அம்மா இல்லை. இது அத்தா என்கிறது. இவளுக்குப் புரிய வைக்கப் போவது யார்? காலமா? கூட இருக்கும் மனிதர்களா? கடக்கப் போகிற வாழ்க்கைத் தடமா?
கேள்விகள் சிவாவின் மூளைக்குள் துளைத்துக் கொண்டிருந்தன.

இரஜகை நிலவன்



அகர முதல

# வாழ்க்கை என்னும் கவிதை

அத்தியாயம். 4 இனிமையான கணங்கள்

''அப்பா நான் அத்தா கிட்டே போகிறேன்'' என்று இறங்கி ஓடியது குழந்தை.

புவனாவும் அம்மாவும் பேசிக் கொண்டிருந்ததை அது தொந்தரவு செய்ததும், புவனா எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு அவளை மடியில் தூக்கி வைத்துக் கொண்டாள்.

''அத்தா.. அம்மா எனக்கு எப்போது பொம்மை வாங்கிக் கொண்டு வருவாள்" என்று புவனாவின் முகத்தைப் பிடித்துக் கொண்டுக் கேட்டது.
புவனா வெளியில் நின்ற தன் அம்மாவைப் பார்த்தாள். அவள் கண்களில் பொங்கிய நீரைத் துடைத்து விட்ட குழந்தையிடம் ''திவ்யா அம்மா சீக்கிரம் பொம்மை கொண்டு வருவா. அது வரைக்கும் நீ புவனா அம்மாவிடம் சமத்தா நடந்துக்கணும். என்ன?'' என்றாள். ''சரி பாட்டி, அத்தா எனக்குப் பசிக்குதே''

''சோறு தரட்டுமா? என் குட்டிக்கண்ணுக்கு இட்லி தரட்டுமா?'' என்றாள் புவனா.

''அய்யே எங்கம்மா உடனே பிரட்டுதான் கொடுக்கும். உனக்குத் தெரியலே... நான் அப்பாக்கிட்டே போய் பிரெட்டும் ஜாமும் வாங்கிக்கிறன்'' இறங்கிக் கொண்டாள் திவ்யா.
''புவனா குழந்தையென்றால் அப்படித்தானிருக்கும்'' என்றாள் அம்மா.
''என் அறிவுக்கு எட்டுகிறது அம்மா. ஆனால் மனசுதான் ஒத்துக்கொள்ள மறுக்கிறது.

சிவா எத்தனை முறை சொல்லியும் சிவாவின் அம்மா கோகுலம்மாள் மறுத்து விட்டாள். ''சிவா, நீ உனக்காக இல்லை என்றாலும் உன் குழந்தைக்கு ஒரு தாய் வேண்டும் என்றாலும் கண்டிப்பாக திரும்பவும் நீ கல்யாணம் கட்டிக்கொள்ள வேண்டும்.''
''அம்மா, இந்தக் குழந்தையை தேவகி மாதிரி யாராலும் பாத்துக்க முடியாதே''

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

அத்தியாயம். 4 இனிமையான கணங்கள்

''என்ன இருந்தாலும் தேவகி உன் பொண்ணோட அம்மாடா. நீ காய்கறிக் கடை வியாபாரத்தை கவனிப்பியா?, இல்லை இந்தப் பொண்ணைத் தூக்கிக் கொண்டு திரிவியா. தேவகி இடத்தை இன்னொரு பொண்ணு நிரப்ப முடியாதுண்ணாலும் இவளை வளர்க்க, உனக்கு ஆக்கி எடுத்துப் போடவாவது நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொண்டேதான் தீரணும்.''

''சரி கொஞ்ச நாள் போகட்டும்மா பார்க்கலாம்.''

உடனே அருகிலிருந்த அப்பா கோவிந்தன் ''சிவா, நீ கொஞ்ச நாள் போகட்டும்னு சொல்லி விட்டு லீவு முடிஞ்சதும் திரும்ப மும்பைக்கு போயிடுவே. எங்களாலே நீ தனியா கிடந்து அல்லாடறதை நெனச்சிக்கிட்டு சாப்பிடக் கூட முடியாதப்பா'' என்றார்.

''சரி அம்மா என்னோட வந்து என் குழந்தையை கவனிச்சிக்கட்டும்''

''என்னடா புரியாம பேசற... உங்கப்பாவை கவனிச்சுகிறது யாரு? காலேஜுக்குப் போற உன் ரெண்டு தம்பிகளுக்கும் சாப்பாடு போடுறது யாரு'' எல்லாம் போக இங்கேயாவது பொங்குற நேரம் தவிர பக்கத்திலே எங்கேயாவது போக முடியும். காடு கழனியை சுற்றிப் பார்த்து விட்டு வரலாம். அங்கே உன் கூட வந்தால் வீட்டுக்குள்ளேயேதான் சுற்றிச் சுற்றித்தான் வரணும்.

எனக்கு பேசுவதற்கு பாஷை தெரியாது. பக்கத்து வீட்டுக்காரி வேற மொழி பேசும்போது நான் பார்த்துண்டு சும்மாதான் நிக்கணும். இந்தப் பிரச்சினை எல்லாம் வேண்டாம்னு திவ்யாவை வளர்க்கறதுக்காகவாவது ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோன்னுச் சொல்கிறேன்.''

சிவா வெறும் மூணு வருஷ வாழ்க்கையோட... எல்லாம் முடிந்து விட்டது என்று இப்ப உனக்கு தோணும். தேவகி நல்லவதான். அவ உன்னோட நல்ல முறையில் குடித்தனம் பண்ணியிருப்பாள். ஆனால் அவள் இப்போது இல்லையே. என்னோடு கூட மாமி... மாமின்னு எத்தனை முறை இழைஞ்சுகிட்டு ஓடியாடி வேலை செய்திருக்காள். ஆனால் அதற்காக அவளையே நெனைச்சுகிட்டிருந்தா... மற்றபடி நடக்க வேண்டிய வேலைகள் நடந்துதானே ஆகவேண்டும்.

இரஜகை நிலவன்

# மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

## கட்டுரை

### செந்தமிழ்க் களஞ்சியம், இலக்கணத் தாத்தா
### 31.08.1896 - 04.02.1985



**சிறப்பு**

'தமிழ்த் தாத்தா' என்றதும் உவேசா நினைவுக்கு வந்துவிடுகிறார். 'தமிழ் இலக்கணத் தாத்தா'வான மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை பற்றி இன்றைய தலைமுறைக்கு அறிமுகமில்லாமல் போனது துரதிர்ஷ்டம்.

**வாழ்க்கை**

மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை சென்னை, சைதாப் பேட்டை மேட்டுப்பாளையத்தில் 31.08.1896 ல் பிறந்தார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்ற மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் எழுதுவதிலும் இணயற்றவர்.

சென்னை முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக 1920-ல் பணியில் சேர்ந்த மே.வீ.வே., 1923 வரையிலும் அங்கு பணியாற்றினார். புரசைவாக்கம் பாப்ரிசியஸ் பள்ளியில் 1938 வரையிலும் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். ஆசிரியர் பணியிலிருந்து விலகிய மே.வீ.வே., சொந்தமாகப் புத்தகங்களை எழுதி பதிப்பிக்கத் தொடங்கினார். அவர் எழுதிய நூல்கள் பள்ளி மாணவர்களுக்கான பாட நூல்களாகப் பரிந்துரைக்கப்பட்டன. அவரது இலக்கண தேர்ச்சியைப் பதிப்பாளர்களும் பயன்படுத்திக்கொண்டார்கள். தமிழறிஞர்கள் பலர் தங்களது நூல்களைப் பதிப்பிக்கும் முன்னர் அவரிடம் அளித்து செப்பம் செய்துகொண்டனர்.

# மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

## நூல்கள்




இறையனார் அகப்பொருள்,தொல்.சொல் (நச்சர் உரை), தஞ்சைவாணன் கோவை,வீரசோழியம், நளவெண்பா அஷ்டபிரபந்தம்,யாப்பருங்கலம் காரிகை, யசோதர காவியம் முதலியவை மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை தாமாக முயன்று பதிப்பித்த நூல்கள்.

இலக்கண உலகில் இவர் பதிப்பித்த யாப்பருங்கலக்காரிகை இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகிறது. இதற்கு இணையான ஒரு பதிப்பு இன்றுவரை இல்லை என்றே கூறலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை மீள்பதிப்பு செய்துள்ளது. இவர் பதிப்பாளராக மட்டுமன்றி படைப்பாளராகவும் இருந்துள்ளார்.

பத்திராயு(அ) ஆட்சிக்குரியோர்,திருக்கண்ணபிரானார் அற்புத விளக்கு ,குணசாகரர் (அ) இன்சொல் இயல்பு, அரிச்சந்திர புராணச் சுருக்கம், அராபிக்கதைகள் முதலியன இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர, அம்பலவாணன்,இளங்கோவன் என்னும் இரு புதினங்களையும் படைத்துள்ளார்.

## சிந்தாமணிச்செல்வர்

மொழி செப்பமாக இல்லாவிட்டால் கருதிய எச்செயலும் கருதியபடி நடவாது என்பதை உணர்ந்த மே.வீ.வே. மொழியில் பிழை நேராதபடி எச்சரிக்கையுடன் செயல்பட்டுள்ளார்.காஞ்சிபுரத்தில் "கச்சித் தமிழ்க் கழகம்" என்னும் ஓர் அமைப்பை நிறுவி பலருக்கும் தமிழ் உணர்வை ஊட்டினார்.அத்துடன் சீவகசிந்தாமணி குறித்து நெடியதோர் சொற்பொழிவாற்றினார். அதனால்தான் திரு.வி.க. "சிந்தாமணிச்செல்வர்" என்னும் பட்டமளித்து இவரைப் பாராட்டினார்.

# மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

கட்டுரை

பட்டமும் புகழும்

செந்தமிழ்க்களஞ்சியம் , கன்னித் தமிழ்க்களஞ்சியம், கலைமாமணி ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். நியூயார்க் உலகப் பல்கலைக்கழகம் மே.வீ.வே.க்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.



கவியரசு கண்ணதாசன் உள்ளிட்ட பலரும் எழுதிய "பாவலர் போற்றும் மகாவித்துவான் மே.வீ.வே." என்னும் தொகுப்பு நூல் இவரது புகழை இன்றளவும் பேசிக்கொண்டிருக்கிறது.

மறைவு

தமிழ் இலக்கிய உலகில் 89 ஆண்டுகள் வரை உலவிய மே.வீ.வே. 04.02.1985 இறைவனடி சேர்ந்தார்.

நன்றி
https://www.hindutamil.in/


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
பொய்க்கு
வேகம் அதிகம்
ஆயுள் குறைவு
உண்மைக்கு
வேகம் குறைவு
எப்போதும் மறைவது இல்லை
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com